Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

30

# குப்தர்கள் கால சிற்பங்கள்

**சோ. வெண்ணிலா,**
**உதவிப் பேராசிரியை, MIT மகளிர் கலை அறிவியல் கல்லூரி,**
**முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

ஆய்வுச் சுருக்கம்

சிற்பம் என்பது ஒரு முப்பரிமானக் கலைப் பொருள் ஆகும். இது கடினமான அல்லது நெகிழ்வுத் தன்மை கொண்ட பொருள்களுக்கு உருவம் கொடுப்பது மூலம் உருவாக்கப்படுகிறது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து சிற்பக்கலை வளர்ந்து வருகின்றது. மனித நாகரிகத்தையும் அதன் வளச்சிக் கூறுகளையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் சிற்பக்கலை இன்றியமையாதது ஆகும். அச்சிற்பக்கலையை இங்கு விரிவாகக் காண்போம்.

**சிற்பவகைகள்**

1. தனிச்சிற்பம் - மனிதர், விலங்கு
2. புடைப்புச் சிற்பம் - நினைவுச்சின்னங்கள், நடுகற்கள்
3. செதிக்குச் சிற்பங்கள் - நாணயம், பதக்கங்கள்
4. குறிப்பிட்ட இடம் சார்ந்த சிற்பங்கள்
5. இயங்கியல் சிற்பம்
6. அடுக்கற்கலை சிற்பம்

**குப்தர்கள்**

குஷானப் பேரரசின் மறைவிற்குப் பின்னர் வடஇந்தியாவில் கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரை அரசியல் வாழ்க்கையில் சிறப்பில்லாத நிலை காணப்பட்டது. குஷாணப் பேரரசு வீழ்ச்சியடைந்தாலும் சாகர்கள் மேற்கு பஞ்சாப்பிலும் குஜராத் மாளவத்தின் பகுதிகளிலும் தங்கள் ஆட்சிப் பிடிப்பை ஓரளவிற்குக் கொண்டிருந்தனர். வடஇந்தியாவின் மற்ற பகுதிகள் பல்வேறு சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தன. அவற்றுள் சில குடியரசுகளாக விளங்கின. அந்தச் சூழ்நிலை வலிமை மிக்க ஓர் அரசனால் பேரரசு ஒன்றினை உருவாக்குவதற்குப் பொருந்தமானதாக இருந்தது. குப்த அரசர்களின் காலத்தில் அறிவியல், தந்துவம், சமயம் ஆகியவை உன்னத நிலையை அடைந்தன. அத்தகைய சிறப்புவாய்ந்த குப்தப்பேரரசைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்களைத் தெரிந்துகொள்வோம்.

**குப்தர்களைப்பற்றி அறிய உதவும் ஆதாரங்கள்:**

1. இலக்கியங்களில் புராணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

விஷ்ணு புராணம்

மத்சயபுராணம்

வாயுபுராணம்

பிரமாண்டபுராணம்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பகவத்புராணம்

இரண்டாம் சந்திரகுப்தரின் தலைமை அமைச்சர் எழுதிய காமாந்தக நீதிசாரம்

- சேதுபந்தம் என்னும் நூல் இலங்கை மீது இராமர் படையெடுத்து இராவணனை வெற்றி பெற்ற செய்தியை அறிவிக்கின்றது.
- பாகியான் என்னும் சீன யாத்ரிகர் எழுதி வைத்துள்ள குறிப்புகளுக்குப் போ-குவா-கி என்று பெயர். இதன் பொருள் புத்தப் பேரரசுகளின் பதிவுகள்

2. பட்டயங்கள்

- குப்தர்காலத்திய பட்டயங்களைத் டாக்டர் ஃபிளிட் தொகுத்து நூலாக வெளியிட்டார்.

உதயகிரிக் குகைப் பட்டயங்கள், மதுரா கற்பட்டயங்கள், சாஞ்சி கற்பட்டயங்கள் இவை இரண்டாம் சந்திரகுப்தரின் அரசாங்கம் எத்தகைப் பிடிப்பு வைத்திருந்தது என்பதை உணர்த்துகிறது.

பில்சாத் கல்தூண்பட்டயம், கத்வாகற்பட்டயம், மன்குவார் கற்பட்டயம் ஆகியன முதலாம் குமாரகுப்தர் பற்றிய செய்திகளை அறிவிக்கின்றன.

- மெக்ராலி இரும்புத்தூண் சந்திர குப்தர் என்ற அரசனைப் பற்றி எழுத்துரைக்கின்றது.

3.முத்திரைகள்

- இரண்டாம் சந்திரகுப்தரின் பட்டத்து அரசியான மகாதேவி துருவாஸ்வமிளியின் முத்திரைகள் கிடைத்துள்ளன.
- வைசாலியைச் சேந்த அரசு அலுவலர்களின் முத்திரைகளும் நமக்கு வரலாற்றை அறிய உதவுகின்றன.

4. நினைவுச் சின்னங்கள்

- நாளந்தாவைப் பற்றி அறிய நாளந்தாவில் கிடைத்துள்ள நினைவுச்சின்னங்கள் உதவுகின்றன.

5. நாணயங்கள்

- முதலாம் சந்திரகுப்தர் - மனைவி குமாரதேவி, சமுத்திர குப்தர், இரண்டாம் சந்திரகுப்தர், முதலாம் குமாரகுப்தர், ஸ்கந்தகுப்தர் போன்றோரின் உருவங்களைக் கொண்ட எண்ணிறந்த வெள்ளி நாணயங்கள், தங்கநாணயங்கள் கிடைத்துள்ளன.
- அசுவமேத வேள்வி பற்றிய நாணயம், வேட்டையாடுவோன் போன்ற நாணயம், இசைக்கலைஞன் போன்ற நாணயம், சிங்கத்தோடு பொருவோன் நாணயம், யானை மீதி சவாரி செய்வோன் நாணயம் ஆகியவை குப்தர் வரலாற்றை அறிய உதவுகின்றன.
- தங்கம், வெள்ளி ஆகிய உலாகங்களில் நாணயங்கள் வெளியிடப்பட்ட முறை குப்தப் பேரரசின் செல்வச் சிறப்பினை நமக்கு எடுத்துகாட்டுகின்றன.

**குப்தர் காலம் (கி.பி. 320-600)**

இந்தியச் சிற்பக்கலையின் தூய சரிதை குப்தர் காலத்திலிருந்து தொடங்குவதாகக் கொள்ளலாம். பிராமண, புத்த சமயக் கடவுளரின் உருவச்சிலைகளைக் குப்தர் காலத்துக் கலைஞர்கள்

படைத்தனர். புத்தரின் உருவச்சிகைள் பல காசிக்கு அருகில் உள்ள சாரனாத் என்றுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மதுராவிலும் மற்றும் சில இடங்களிலும், புத்தரின் கல் உருவச்சிலைகளும் தாமிரச்சிலைகளும் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. தியோகார்க் கோயிலுள்ள (ஜான்சி மாவட்டம்) சில பலகைகளிலும், மற்றும் சில இடங்களிலும் சிவன், விஷ்ணு முதலிய பல பிராமணக் கடவுளரின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

எண்பதடி உயரமுள்ள தாமிரத்தாலான புத்தரின் உருவச்சிலையை நாளந்தாவில் கண்டதாக யுவான் சுவாங் சுறுகிறார். சுல்தான்கஞ்சில் கண்டெடுக்கப்பட்ட 7 1/2 அடி. வெண்கல புத்தர்சிலை, அரியதொரு சிற்பமாய் விளங்குகிறது.

**குப்தர் காலக் கலைகள்**

1.சிற்பக்கலை

2. கட்டிடக்கலை

3. ஓவியக்கலை

4. நாணயக் கலை

இத்தகையக் கலைகள் குப்தர்கள் காலத்தில் சிறந்து விளங்கின
இந்துக்கலையின் மேன்மையான நிலையே குப்தர்களுடைய கலை என
வின்சென்ட் ஸ்மித் குறிப்பிட்டுள்ளார்.
காட்ரிங்க்டன் என்பவர்,

குப்தர்கலை அதனுடைய அறிவாற்றலுக்காகப் புகழப்பெறுகிறது. ஒழுங்கிலும் அமைப்பிலும் காட்டப்பெறும் சிறப்புக்கள் உயிருள்ள பொருட்களின் உயிர்ப்பையும் துடிப்பையும் வெளிப்படுத்தும் நயம், அழகு பொருட்களின் அசைவினை வெளிப்படுத்தும் நயம், அசையா நிலையில் அப்பொருட்களின் எழிலை விளக்கும் படைப்புத்திறன் இவற்றில் குப்தர்கலை சிறந்து விளங்குவது பண்டைடைய இந்தியக்கலையின் விளைவே ஆகும்.

**குப்தர்கால சிகரக்கலை :**

குப்தர்கால சிற்பக்கலையின் சிகரமாகத் திகழ்வது பௌத்த சிற்பக்கலையேயாகும். புத்தரின் சிலைகள், குறிப்பாக சாரநாத்தில் அமர்ந்த நிலையில் உள்ள புத்தர் சிலையும், சுல்தான்கஞ்சிலுள்ள புத்தரின் செப்புச்சிலையும் பௌத்த சிற்பக்கலையின் தனிச் சிறப்புகளுக்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

டெல்லியில் உள்ள தேனிரும்பால் உருவாக்கப்பட்ட 23 அடி எட்டு அங்குலம் உள்ள ஆறு டன் எடையுள்ள இரும்புத்தூண் உலோக உருக்குக்கலை அதிசயமாகும். உலகின் எந்த ஒரு உருக்காலையிலும் இத்தகைய துணை வடிவமைக்க முடியாது. இத்தூன் இன்றளவிலும் துருப்பிடிக்காமல் உள்ளது.

ஸ்கந்தகுப்தர் பித்தாரியில் எழுப்பிய ஒற்றைத்தூணும் பிற தூண்களும் பிரசித்தி பெற்றவை.
பொதுவாக குப்தர் கால சிற்பக்கலை எளிமைக்கும், அழகுக்கும், மலச்சிக்கும், பெருந்தன்மைக்கும்,

அடக்கத்துக்கும், அலங்காரமிமைக்கும், உடற் கவர்ச்சியின்மைக்கும் பெயர் பெற்றவை.

**சிற்பக் கலையின் சிறப்புகள்**

குப்தர் காலத்தில் தோன்றிய சிற்பக் கலைகளுள் பெரும்பாலானவை ஆடை ஆபரணங்களோடே காட்சியளிக்கின்றன. இவர்கள் காலத்தில் செய்யப்பட்ட புத்தர் சிலைகள் யாவும் தலையில் சுருட்டை மயிருடன் கூடிப் பல்வேறு அழகிய நிலைகளில் காட்சியளிக்கின்றன.

குப்தர் காலத்துச் சிற்பங்களுள் புத்தருக்கு அடுத்தபடியாகச் சிறந்து நிற்பவை சிவனின் சிற்பங்களே. குசானர் காலத்தில் சிவபெருமானை லிங்க உருவத்தில் வழிபட்டார்கள். ஆனால் குப்தருடைய காலத்தில் லிங்க உருவத்தில் ஒரு முகமும் மற்றும் நான்கு முகங்களும் கூடிய சிவனின் சிற்பங்கள் உருவாக்கப்பட்டன. சிவனை உமையொரு பாகன் உருவில் சிற்பமாக படைத்து வழிபட்டதும் குப்தருடைய காலமே ஆகும்.

சிற்பக்கலையில் திருமால்

திருமாலின் பத்து அவதாரங்களை உருவங்களாகப் படைத்து குப்தர்கள் சிற்பக் கலைக்கு ஆக்கம் தேடினார்கள். இவற்றுள் மிகவும் புகழ்வாய்ந்தவை வடமதுரையில் உள்ள திருமாலின் சிற்பமும் உதயகிரியிலுன் வராக அவதாரமும் ஆகும்.

தேவகிரியில் கோயிலில் படைக்கப்பட்டுள்ள கோபாலனும் கோபிகளும், வேலன் வீடுபேறு, அனந்த சயனம் முதலிய சிற்பங்கள் சிறப்பானவை. இவற்றைப் போலவே சிவனின் திருவிளையாடல்களையும் கோயிலில் சிற்பங்களாகத் தீட்டியுள்ளார்கள். கங்கை, யமுனை முதலிய ஆறுகளை உருவகப்படுத்திச் செதுக்கப்பட்ட சிற்பங்களும் இக்கோயில்களில் காட்சி அளிக்கின்றன.

**குப்தர்காலத்துச் சிற்பம் - இந்தியரின் கற்பனை:**

குப்தர்காலத்துச் சிற்பங்கள் அக்கால இந்தியரின் கற்பனைகளையும், உள்ளொளியையும் நமக்குப் பிரதிபலிக்கின்றன.

எடுத்துக்காட்டாக,

புத்தரின் உருவச்சிலையின் மேல் போர்த்திருயிருக்கின்ற துணியின் மடிப்புகளும், இடுப்புக்குக் கீழிருகின்ற துணியின் மடிப்புகளும் இடுப்பில் கட்டப்படுள்ள கயிற்றின் உருவமும் இவற்றைத் தாண்டி அமைந்துள்ள புத்தரின் உடலழகும், அதன் பின்னணியாகவுள்ள சிறுசிறு முத்துகளும் நவதானியங்களும் ஓர் உருப்பெருக்கிக் கண்ணாடியில் காணப்படுவது போல் காட்சியளிக்கின்றன.

சாதாரணக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள இச்சிலை இன்றைய பளிங்குச் சிலைபோல், நம் கண்ணையும், கருத்தையும் கவருகிறது. டென்மார்க்குக் கலையறிஞர் அக்சல் ஜார்ன் என்பவர் இந்தியாவின் உள்ளொளிக்கும் கலைத்திறனுக்கும் எழுத்துக்காட்டாய் நிற்பவை அஜந்தாவில் காணப்படும் சிற்பங்களும் ஓவியங்களும் ஆகும் என்கிறார்.

பெரிய உருவத்திலிருந்து மிகச்சிறிய பூக்கள், முத்துக்கள் வரை தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களும் உன்னிப்பாக நோக்குவோர்க்கு அவற்றை ஆக்கிய கலைஞர்களின் அறிவின் ஆழமும் கலைத்திறனும் புலப்படும் என்கிறார்.

**குப்தர்களின் கலை:**

குப்தர்களின் காலம் பண்டைய இந்தியக் கலைகளின் பணபாட்டு மறுமலர்ச்சிக் காலம் எனக் கருதப்படுகிறது. பொருளாதாரத்துறையைப் பொறுத்தவரையில் இது உண்மையாக இல்லாதிருக்கலாம். ஏனென்றால் இக்காலப்பகுதியில்தான் வடஇந்தியாவில் பலநகரங்கள் நலிவுற்றன. ஆனால் குப்தர்களிடம் ஏராளமான தங்கம் குவிந்திருந்தது. அது அவர்களுக்கு எங்கிருந்து எப்படிக் கிடைத்தது என்று தெரியாவிட்டாலும் அவர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் தங்க நாணயங்களை வெளியிட்டனர். அரச வம்சத்தினரும், செல்வந்தர்களும் தங்கள் வருவாயில் ஒரு பகுதியை கலை, இலக்கியத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஆதரவளிப்பதற்குப் பயன்படுத்தினர்.

சமுத்திரகுப்தனும் இரண்டாம் சந்திரகுப்தனும் கலை இலக்கியத்தின் புரவலர்களாக திகழ்ந்து வந்தனர். சமுத்திரகுப்தன் யாழ் இசைப்பது போன்று அவனது நாணயங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கிறான். இரண்டாம் சந்திரகுப்தன் இன்னும் ஒரு படி மேலே சென்று தனது பேரவையை 9 புகழ்சான்ற பேரறிஞர்களைக் கொண்டு அலங்கரிக்கச் செய்து சிறப்பித்தான்.

**குப்தர்கால புத்த மதம்**

மௌரியர் காலத்திலும் மௌரியருக்குப் பிந்திய கலத்திலும் பல்வேறுகலைகளின் வளர்ச்சிக்கு புத்தமதம் மிருந்த அக்கமும் ஊக்கமும் அளித்தது. முக்கியமாக வட்டவடிவமான கல் அடித்தளத்தின் மீது எழுந்து நிற்கும் ஸ்தூபிகள் கவிகை மாடங்கள் போல் காட்சியளித்தன. புத்தரின் எண்ணற்ற உருவச்சிலைகள் செதுக்கப்பட்டு ஆங்காங்கே அணி செய்தன. வெண்கலத்தாலான புத்தர்சிலை ஒன்று பகல்பூருக்கு அருகில் சுல்த்தான்கஞ்சில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

**குப்தர்காலம் - கட்டிடக்கலை**

கட்டிடக்கலையில் குப்தர்காலம் பின்தங்கியிருந்தது என்றே கூற வேண்டும். செங்கற்களால் கட்டப்பட்ட ஒருசில கோயில்களையும், கற்களைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு கோயிலையும் உத்திரபரதேசத்தில் காண்கிறோம். கான்பூரில் பிதார்கௌனிலும், காஜிப்பூரில் பிதாரியிலும் ஜான்சியில் தியோகரிலும் உள்ள கோயில்களை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம். நாளந்தா பௌத்த பல்கலைக்கழகம் ஐந்தாம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட அதன் ஆரம்பக்காலக் கட்டிடங்கள் இந்த காலப் பகுதியைச் சேர்ந்தவையாகும்.

**சிற்பக்கலை உச்சத்தைத் தொட்டது குப்தர்காலம்:**

சிற்ப மற்றும் மட்பாண்டக் கலைகளில் ஏற்பட்ட முந்தைய வளர்ச்சிகளின் உச்சத்தை குப்தர்களின் சிற்பங்கள் காட்டுகின்றன. உத்திரபிரதேசத்தின் கைரிகாரிலுள்ள அசாதாரணமான, பிரம்மாண்டமான குதிரைச்சிற்பம் சமுத்திரகுப்தன் தன்னுடைய அஸ்வமேதயாகங்களில் ஒன்றில் பலி கொடுத்த குதிரையைக் குறப்பதாகப் பெரும்பாலும் கருதப்படுகிறது. அது தோற்றத்தில் குஷானர்களின் சிற்ப மற்றும் மட்பாண்டக்கலை மரபின் சாயல் கொண்டதாக இருக்கின்றது. அந்தக் காலத்தில் வடிக்கப்பட்ட பிராமணிய தெய்வச்சிலைகள் பெரும்பாலும் விஷ்ணுவின் அவதாரங்களாவும், சிறிய வைணவத் தெய்வங்களாகவும் இருக்கின்றன. இன்றும் அடிப்படையில் பிறப்புறுப்பை வழிபடுவதாக இருந்த சைவ சமய வழிபாடு அநேகமாகச் சிற்பக் கலை வளராமல்

போனதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

புத்தர் தர்மச்சக்கர பரிவர்த்தனைத் தோற்றத்தில் அமர்ந்திருக்கும் சிற்பம் சாரநாத் சிற்பங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆழ்ந்த சிந்தனையும், கருணையும் கொன்ட புத்தர் தன்னுடைய முதல் அருளுரையை வழங்குவது இச்சிற்பத்தில் சிறப்பாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. சாரதாத் மரபின் தாக்கத்தைக் கிழக்கு மற்றும் மேற்கு இந்தியாவிலும், தக்காணத்திலும் காண முடிகிறது. இருப்பினும் தெற்கே செல்லச் செல்ல அதன் செல்வாக்கு குறைந்தது. அங்கு உள்ளூர் சார்ந்த வழிபாட்டு மரபுகள் ஆதிக்கம் செலுத்தின.

**முடிவுரை:**

குப்தர்கள் காலத்தைச் "செவ்வியல் காலம்" என்கிறார் வரலாற்றுத்துறை ஆய்வாளர் ரொமிலா தாப்பர். அறிவாற்றாலாலும் ஆளுமைத்திறத்தாலும். இராணுவ வலிமையாலும். ஆட்சிச் சிறப்பாலும் குப்தப் பேரரசர்கள் அமைதியை நிலைநாட்டி, வளங்களை செவவனே பயன்படுத்தி சாதனை படைத்த முன்னோர்களை முன்மாதிரியாகக் கொண்டு படைப்பாளிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து இந்தியாவின் பெரும்பகுதியை ஆட்சி செய்து இந்தியப் பொதுஉணர்வை உருவாக்கினர். எனவே குப்தர்களின் காலம் செவ்வியல் காலம் என்றும், இந்தியக் கலைகளின் மறுமலர்ச்சிக் காலம் என்றும் கூறுவதில் வியப்பேதுமில்லை.

**பார்வை நூலகள்:**

1. R. C. மஜூம்தார், H. C. ராய் சௌத்ரி, K. தத்தா, *இந்தியாவின் சிறப்பு வரலாறு (முதற் பகுதி),* தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை,1965.
2. டி. டி. கொசாம்பி, *பண்டைய இந்தியா பண்பாடும் நாகரிகமும்,* நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை,1989.
3. ரொமிலா தாப்பர், *முற்கால இந்தியா தொடக்ககாலத்திலிருந்து கி.பி. 1300 வரை,* நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை,2016.
4. கோ. தங்கவேலு, (*இந்திய வரலாறு( தொகுதி 1),* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1976.
5. R. S. சர்மா, *பண்டைக்கால இந்தியா*, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை,2001.
6. டி. என். ஜா, *பண்டையக்கால இந்தியா ஒரு வரலாற்றுச் சித்திரம்,* பாரதி புத்தகாலயம்,சென்னை,2011
7. மருதன், *ரொமிலா தாப்பர் ஓர் எளிய அறிமுகம்,* கிழக்கு பதிப்பகம்,சென்னை,2022.
8. டாக்டர் க. வெங்கடேசன், *இந்திய வரலாறு (சிந்து முதல் பிளாசி வரை கி.மு. 3000 முதல் கி.பி. 1757 வரை),* வி.சி.பப்ளிகேசன்ஸ், இராஜபாளையம்,2014.